உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
மாற்றத்தின் ஆரம்பம்
www.dhinatamil.com
dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 11.05.2026 • மலர் 04 • இதழ்: 131
• Edition : Nagercoil • 11.05.2026 • Vol : 04 • Issue : 131 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# கஜானா காலி... அவகாசம் தேவை

## வெள்ளை அறிக்கை வெளியிடுவேன்!" முதல்வர் விஜய் முதல் உரை

"தமிழக அரசுக்கு ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் கடன் உள்ளது.அரசின்கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டு சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளைஅறிக்கையாக வெளியிடுவேன்" என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்தார்.

பதவியேற்புவிழாவை தொடர்ந்து 3 முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்ட பின்னர் உரையாற்றிய முதல்வர் விஜய், "சினிமாவில் ஒரு சாதாரண உதவி இயக்குநரின் மகன் தான் நான். எனக்கு வாழ்க்கையில் வறுமை, பசி என்றால் என்னவென்று தெரியும். நான் மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவன் அல்ல. நான் உங்கள் குடும்பத்தில் ஒருவன் தான். நீங்களும் என்னை அப்படி நினைத்ததால் தான், என்னை வெற்றி பெறவைத்துள்ளீர்கள்.

இந்த பயணத்தில் எனக்கு பல அவமானங்கள் நடந்தது, அதுபோல உங்களுக்கும் நடந்தது. ஆனால் என்கூடவே நின்றீர்கள். நான் ஒன்றும் தேவதூதன் கிடையாது. ஒரு இயல்பான வாழ்க்கை வாழும் மனிதன் தான். சாத்தியமற்ற வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்ற மாட்டேன். எது சாத்தியமோ அந்த வாக்குறுதிகளையே நான் சொல்வேன்.

இத்தனை கோடி மக்கள் என் கூட இருக்கும் போது என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உள்ளது. தமிழக அரசுக்கு ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் கடன் உள்ளது.அரசின்கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டு சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்தால் தான் என்ன இருக்கிறது, என்ன இல்லை எனத் தெரியும். உள்ளே போய் பார்த்து விட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளைஅறிக்கையாக வெளியிடுவேன்.

நான் யாரையும் மறைமுகமாக, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க மாட்டேன். எல்லாவற்றையும் வெளிப்படையாக செய்வேன். அதே நேரத்தில் எனது வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். பெண்களுக்கான பாதுகாப்பை கண்டிப்பாக உறுதி செய்வேன், போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன், நமது பசங்களை காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பு. சட்டம் ஒழுங்கை கண்டிப்பாக உறுதி செய்வேன். என்னை அவமானப்படுத்தியவர்களுக்கும், 8 கோடி மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவேன்.


கல்வி, மருத்துவம், குடிநீர், சாலை, ரேஷன் போன்ற அடிப்படை பிரச்சினைகளில் முழு முதல் கவனம் செலுத்துவேன். நான் மக்கள் பணத்திலிருந்து ஒரு ரூபாய் கூட எடுக்க மாட்டேன். எனக்கு அந்த அவசியம் இல்லை. அது போல நான் யாரையும் தப்பு செய்யவும் விடமாட்டேன். எனது அரசில் யாரும் தவறு செய்ய விடமாட்டேன். ஜெயித்துவிட்டோம் என ஒரு ஆட்டம் ஆடிப்பார்க்கலாம் என்ற எண்ணம் இருந்தால், அதனை உடனே மறந்துவிடுங்கள். என் அரசில் ஒரே அதிகார மையம்தான், அது நான் தான். பல அதிகார மையங்கள் இங்கே கிடையாது. பெண்கள், விவசாயிகள் உட்பட அனைத்து மக்களும் நம் அரசின் நன்றாக இருப்போம்.

சிறுபான்மையினருக்காக நமது அரசு எப்போதும் துணை நிற்கும். இந்து, முஸ்லிம், கிறித்துவர்களுக்கான முகம் தான் இந்த விஜய்யின் முகம்.

முக்கியமாக இந்த விஜய் மாமாவின் குட்டி நண்பா, நண்பிகளுக்கு நன்றி. அவர்களால் தான் இந்த விஷயம் நடந்துள்ளது. அவர்களின் எதிர்காலத்துக்காக திட்டங்களை நிறைவேற்றுவேன். தவெக தோழர்களுக்கு நன்றி. வாருங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவோம்.

மக்கள் நலனை மட்டுமே பிரதானமாக கொண்ட நம் அரசுக்கு ஆதரவு வழங்கிய காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி, வேணுகோபால், பிரவீன் சக்கரவர்த்தி, சிபிஎம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, பெ.சண்முகம், விசிக தலைவர் திருமாவளவன், ரவிக்குமார், வன்னியரசு, சிபிஐ தேசிய செயலாளர் டி.ராஜா, மாநில பொதுச் செயலாளர்

வீரபாண்டியன், ஐயுஎம்எல் காதர் மொய்தீன், நவாஸ் கனி அனைவருக்கும் நன்றி. நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும்" என்றார்.



## அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே கடன் அளவு: முதல்வர் விஜய்க்கு மு.க. ஸ்டாலின் பதில்



தமிழ்நாட்டின் கடன் அளவு அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே இருக்கிறது என்று முதல்வர் விஜய்யின் குற்றச்சாட்டுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்க்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவியேற்றதும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள அறிவிப்புகளையும் வரவேற்கிறேன்.

எடுத்த எடுப்பிலேயே அரசிடம்பணம்இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க. அதெல்லாம் இருக்கு. மக்களுக்குக் கொடுக்க மனசும், ஆட்சித் திறமையும்தான் வேணும்.

ஐந்து ஆண்டுகளாக, கோவிட், வெள்ளம் போன்ற பல பிரச்னைகளையும் மத்திய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனையையும் சமாளிச்சுதான் நாங்க எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றினோம்.

'ரூபாய் 10 லட்சம் கோடி கடனை வைத்து விட்டு, கஜானாவைத் துடைத்து விட்டுச் சென்றுள்ளது கடந்த அரசு' என்ற குற்றச்சாட்டை முதல் உரையிலேயே சொல்லி இருக்கீங்களே... அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றி கடந்த பிப்ரவரி மாத பட்ஜெட்லயே தெளிவா நாங்க சொல்லிட்டோம். அது உங்களுக்குத் தெரியாதா? அதுக்குப் பிறகுதான நீங்க பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீங்க? உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீங்க!

"நடைமுறைக்கு சாத்தியமானதை மட்டுமே வாக்குறுதிகளாக அளிக்கிறேன்" எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள நீங்கள் இப்போதுதான் அரசு நிர்வாகத்துக்குள் அடியெடுத்து வைக்கிறீர்கள். கூடிய விரைவில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றலாம் எனும் நுணுக்கங்களையும் எங்களைப் போலவே நீங்களும் நிச்சயம் கற்றுக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். வாக்களித்த மக்களோடு, நானும் அதையே எதிர்பார்க்கிறேன்.

தங்களின் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர மீண்டும் எனது வாழ்த்துகள்! இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



### ஜனநாயக முதல்வருக்கு தின தமிழ் நாளிதழ் வாழ்த்து

ஜனநாயகத்தின் வலிமையான புதிய ஒரு சகாப்தத்தின் தொடக்கமாக மக்களின் பேராதரவுடன் தமிழகத்தின் 13வது தமிழக முதல்வராக பதவி ஏற்றிருக்கும் தமிழக வெற்றி கழக தலைவர் ஜோசப் விஜய்க்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அமைச்சர்களாக பொறுப்பேற்க இருப்பவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தின தமிழ் நாளிதழ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## 3வது இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து; அன்றைய தி.மு.க. அரசு ஏற்றுக்கொள்ளவில்லை - வி.சி.க.

சென்னை, மே. 11

தமிழ்நாட்டின் 12வது முதல்அமைச்சராக, த.வெ.க. தலைவர் விஜய் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பதவியேற்று இருக்கிறார். அவரது பதவியேற்பு விழா நேற்று காலை 10 மணிக்கு சென்னை பெரியமேடு அருகே உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

பதவியேற்பு விழாவின்போது முதலில் வந்தே மாதரம், பிறகு தேசிய கீதம், அதனை தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து ஆகிய பாடல்கள் பாடப்பட்டன. தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் 3வதாக பாடப்பட்டதற்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்பட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகளில் ஒன்றான விடுதலைச்சிறுத்தைகள் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழக அரசு நிகழ்ச்சிகளில் எப்போதும் தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமே தொடக்கத்தில் பாடப்படும். நிகழ்ச்சி நிறைவின்போது தேசிய கீதம் பாடுவதுதான் மரபு.

இதற்கு முன்பு கவர்னராக இருந்த ஆர்.என்.ரவி அதை மாற்ற வலியுறுத்தியபோது கூட அன்றைய தி.மு.க. அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் விஜய் பதவி ஏற்கும் விழாவின்போதும், தற்காலிக சபாநாயகராக கருப்பையாவை தேர்வு செய்கின்ற நிகழ்வின்போதும் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்படுகிறது. விமர்சனங்கள் வந்த பிறகும் அதை மாற்றிக் கொள்ளவில்லை என்பது வருத்தமளிக்கிறது. அவ்வாறு வந்தே மாதரம், தேசியகீதம் பாடப்பட்டு மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடியது கண்டனத்திற்குரியது." என வி.சி.க. தெரிவித்துள்ளது.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## அதிகாரப் பசி கொண்ட காங்கிரஸ் திமுகவின் முதுகில் குத்திவிட்டது: பிரதமர் மோடி கடும் தாக்கு

பெங்களூரு, மே. 11

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

தமிழ்நாட்டில் அரசியல் சூழல்மாறியஅடுத்தகணமே திமுகவுக்கு துரோகம் இழைத்துள்ளது காங்கிரஸ். காங்கிரஸின் நலனுக்காக 30 ஆண்டுகளாக உழைத்த திமுகவின் முதுகில் குத்திவிட்டு, அதிகாரப்பசிக்காக, வாய்ப்பு கிடைத்தஉடனேயேஉறவை துண்டித்துள்ளது.

அரசியல் காற்று மாறி வீசியவுடன் இப்போது காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு மாறிவிட்டது. முதல் சந்தர்ப்பத்திலேயே அதிகாரத்துக்காக திமுகவின் முதுகில் குத்திவிட்டது. இப்பொழுது யார் முதுகில் ஏறி சவாரி செய்யலாம் என்று தெரிந்தும் திமுகவை கழற்றிவிட்டது. தமிழ்நாட்டில் நிலவும் சூழலைச் சற்று உற்றுநோக்கினால், கடந்த 25 முதல் 30 ஆண்டுகளாக, காங்கிரஸ் கட்சியானது தி.மு.க.வுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தது. பல தருணங்களில், தி.மு.க.வுடனான கூட்டணியே காங்கிரசை பல்வேறு நெருக்கடிகளிலிருந்து பாதுகாத்து மீட்டெடுத்தது. சொல்லப்போனால், 2014ஆம் ஆண்டிற்கு முந்தைய 10 ஆண்டுகள் காங்கிரஸ் தலைமையிலான அரசு நீடித்ததே பெரும்பாலும் தி.மு.க.வின் ஆதரவால்தான். ஆயினும், அரசியல் சூழல் மாறியவுடன் தி.மு.க.வுக்குதுரோகம் செய்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.



## மாலத்தீவில் தடகளப் போட்டிகள்:

# திருச்சி வீரர்கள் பதக்கங்கள் வென்று சாதனை



திருச்சி, மே. 11

மாலத்தீவில் நடை பெற்றசர்வதேசமூத்தோர் தடகளப் போட்டிகளில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் அண்ணாவி, 65 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் அன்பழகன், மகளிர் 55 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் பாக்கியலட்சுமி, ஞான சுகந்தி ஆகியோர் பங்கேற்றனர். இவர்கள் மொத்தம் 9 பதக்கங்களை வென்று இந்தியாவுக்கும் திருச்சி மாவட்டத்திற்கும் பெருமைசேர்த்துள்ளனர். இவர்களின் இந்த சாதனைக்கு தமிழக மற்றும் திருச்சி மாவட்ட விளையாட்டு ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.




## மணப்பாறை அருகே

# கார் மோதி பள்ளி பாதுகாவலர் பலி

திருச்சி, மே. 11

மணப்பாறை அருகே துவரங்குறிச்சி புதுவயல் பட்டியைச் சேர்ந்த அழகர் (தனியார் பள்ளி பாதுகாவலர்) மதுரைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற போது, அவ்வழியே வந்த கார் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். துவரங்குறிச்சி போலீஸார் சடலத்தை மீட்டு உடற்கூறாய்வு செய்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர். இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




## தமிழக முதலமைச்சராக விஜய் பதவி ஏற்பு:

# பெரியகுளத்தில் தவெக இளைஞரணி சார்பில் தொழிலதிபர் ஆரோக்கியதாஸ் தலைமையில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கியும் கொண்டாட்டம்

பெரியகுளம், மே. 11

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் தனி பெரும்பான்மை பெற்று காங்கிரஸ் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆகிய கூட்டணி கட்சிகள் ஆதரவுடன் தமிழகத்தின் 14 வது முதலமைச்சர் ஆக பதவி ஏற்றதை தொடர்ந்தும், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினராக சபரி ஐங்கரன் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ததை கொண்டாடும் விதமாக பெரியகுளம்பகுதி தொழிலதிபரும் செல்வா டிம்பர்ஸ் ஷாமில் உரிமையாளருமான ஆரோக்கியதாஸ் ஏற்பாட்டில் பெரியகுளம் நகர இளைஞரணி பிரபாகரன் மற்றும் ஆசிப் மது ஆகியோர் சார்பாக பெரியகுளம் புதிய பேருந்து நிலைய பிரிவு அருகில் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் பெரியகுளம் நகர் கழக நிர்வாகிகள் தினேஷ். முகமது வாஜித், இம்ரான், சௌந்தர பாண்டியன், மதன், வழக்கறிஞர் சக்திவேல், பிரபு, பாலசுப்ரமணி, பால்பாண்டி, நாக பாண்டி, கோபாலகிருஷ்ணன் ராகவன் கோபி, அருண், அஜித் குமார் உட்பட பெரியகுளம் நகர கழகநிர்வாகிகள்மாவட்ட கழக நிர்வாகிகள் தமிழக வெற்றிக் கழக பொறுப்பாளர்கள், தொழிற்சங்கத்தினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈத்தாமொழி அருகே

# நடந்து சென்ற பெண்ணின் நகை பறிக்க முயற்சி: போலீசார் தீவிர விசாரணை

ஈத்தாமொழி, மே. 11

ஈத்தாமொழி பருதியை சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை தனது வீட்டிற்குநடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அங்குள்ள பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே செல்லும்போது, பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த 2 மர்ம நபர்கள் திடீரென அந்தப் பெண் அணிந்திருந்த தங்க தாலி சங்கிலியை பிடித்து இழுத்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் உடனடியாக சத்தம் போட்டு உள்ளார். சத்தம் கேட்டு அப்பகுதி மக்கள் அங்கு கூட்டம் கூட்டியதை தொடர்ந்து, நகையை பறிக்க வந்த மர்ம நபர்கள் செயினை முழுமையாக பறிக்க முடியாமல் அங்கிருந்து வேகமாக தப்பி சென்றனர்.

இதனால் தாலி செயின் அதிர்ஷ்டவசமாக தப்பியது. இந்த சம்பவம் குறித்து ஈத்தாமொழி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை போலீசார் சேகரித்து ஆய்வு செய்து மர்மம் நபர்களை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## களியக்காவிளை அருகே

# கணவனுக்கு கொலை மிரட்டல் விடுத்த மனைவி மற்றும் மகன்; போலீஸ் விசாரணை

களியக்காவிளை, மே.11

களியக்காவிளை அடுத்த படந்தாலுமுடு ,கள்ளிகூட்டம் பகுதியை சார்ந்தவர் சதாசிவன் (64). இவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவருக்கு செல்வி (56) என்ற மனைவி உண்டு. இவர்களுக்கு சிபு (34) என்ற மகனும், சந்தியா (30 ) என்றமகளும்உள்ளனர். சந்தியாவிற்குநாகர்கோவில் பீச் ரோடு பகுதியில் சபின் என்பவருக்கு திருமணம் முடித்து கொடுத்துள்ளனர். சதாசிவன் மனைவி செல்வி மற்றும் மகன் சிபு உள்ளிட்டோர் நாகர்கோவிலில் தனியாக வசித்து வருகின்றனர் என கூறப்படுகிறது. இவர்கள் சதாசிவனை தனியாக விட்டு விட்டு பல வருடங்களாக தனியாக வாழ்ந்து வருகின்றனர். சதாசிவன் கூலிவேலைக்கு சென்று கிடைக்கும் வருமானத்தில் தனியாக வாழ்ந்து வருகிறார். இந்த நிலையில் சதாசிவன் களியக்காவிளை போலீசில் ஒரு புகார் அளித்தார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

எனதுமனைவிசெல்விமற்றும்மகன்சிபுஇருவரும் என்விட்டிற்கு வந்துதங்கி விட்டு செல்வது வழக்கம். கடந்த மார்ச் 24ம் தேதி என் வீட்டில் இருந்த ரேஷன் கார்டு, ஆதார் கார்டு, என் மகன் ஆதார் கார்டு உள்ளிட்டவைகளை எடுத்துச் சென்றனர். எனது ரேஷன் கார்டை தாருங்கள் என நான் பலமுறை அலை பேசி மூலமாக கேட்டும் தரவில்லை.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 25ம் தேதி எனது மொபைல் போனில் மிஸ்டு கால் வந்தது. நான் திரும்ப அழைத்த போது தகாத வார்த்தைகள் கூறி கொன்று விடுவேன் என எனது மனைவி செல்வி மற்றும் மகன் சிபு ஆகியோர் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். ஆகவே நான் உயிருக்கு பயந்து வாழ்ந்துவருகிறேன். போலீசார்நடவடிக்கைஎடுத்து எனது ரேஷன் கார்டை மீட்டு தர வேண்டும் என போலீசில் புகார் மனு கொடுத்துள்ளார். களியக்காவிளை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி வேட்பாளர்கள் செலவு கணக்குகளை ஒப்படைக்க அறிவுறுத்தல்



திருச்சி, மே. 11

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் நேற்று மாலை முதல் விலக்கப்பட்ட நிலையில், திருச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 7 நாட்களுக்குள் தங்களது தேர்தல் செலவு கணக்குகளை தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். தேர்தல் செலவின பார்வையாளர்கள் கணக்குகளை சரிபார்த்து சான்றிதழ் வழங்குவார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன் தெரிவித்துள்ளார். இது குறித்த விரிவான தகவல்கள் வெளியாகியுள்ளன.

## விளாத்திகுளத்தில்

# தவெகவினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி உற்சாக கொண்டாட்டம்



விளாத்திகுளம் மே11.

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப்விஜய் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதை தொடர்ந்துதூத்துக்குடிமாவட்டம்விளாத்திகுளத்தில் தமிழக வெற்றி கழகத்தினர் உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற இந்த கொண்டாட்ட நிகழ்ச்சியில் கட்சியினர் திரளாக கலந்து கொண்டு பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும் தமிழகத்தின் புதிய முதலமைச்சர் ஜோசப்விஜய் வாழ்க என முழக்கங்கள் எழுப்பி உற்சாகமாக கொண்டாடினர்.

இதனைத் தொடர்ந்து விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் மார்பளவு சிலைக்கு தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக நகர செயலாளர்கள், இணைச்செயலாளர்கள் நகர பொருளாளர், ஒன்றிய செயலாளர்கள், இளைஞர் அணியினர், மகளிர்அணி நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு உற்சாகமாக கொண்டாடினர்.



# அகில இந்திய தேசிய திருவள்ளுவர் பத்திரிக்கையாளர் சங்கத்தின் வடக்கு மண்டல தலைவர் நியமனம்

கிருஷ்ணகிரி, மே. 11

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அகில இந்திய தேசிய திருவள்ளுவர் பத்திரிக்கையாளர் சங்க அலுவலகத்தில் தேசிய தலைவர் பத்திரிக்கையாளர்களின் பாதுகாவலர் முனைவர் கவியரசு அவர்களின் திருக்கரங்களால் தமிழன் தொலைக்காட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட செய்தியாளர் கே சி பெருமாள் வடக்கு மண்டல தலைவராக பொறுப்பை தேசிய தலைவர் அறிவித்தார் அவருக்கான அடையாள அட்டையை கொடுத்து கௌரவித்தார் அதே போன்று அவர் பேசியதாவது கிருஷ்ணகிரி தர்மபுரி திருப்பத்தூர் திருவண்ணாமலை ராணிப்பேட்டை வேலூர் கள்ளக்குறிச்சிவிழுப்புரம் கடலூர்உள்ளிட்ட மாவட்டங்களுக்கு மண்டல தலைவராக நியமனம் செய்த அகில இந்திய திருவள்ளுவர் பத்திரிக்கையாளர் சங்கத்தின் தேசிய தலைவர் டாக்டர் கவியரசுக்கு மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்




# ஈரோட்டில் இலவச மருத்துவ முகாம்

ஈரோடு மே 11

நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் புஷ்பாஞ்சலி ஐயப்பாசபரிமலை சேவா அறக்கட்டளை மற்றும் ஐ பவுண்டேஷன் ஆகியவற்றின் சார்பில் இலவச மருத்துவ முகாம் ஈரோடு வைராபாளையம் சமுதாய கூடத்தில் நடந்தது. சளி மற்றும் காய்ச்சல், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் இருதய மருத்துவம் ஆஸ்துமா பக்கவாதம் தலைவலி அஜீரணக் கோளாறுகள் விரை வீக்கம் கண் சிகிச்சை மற்றும் பல்வேறு நோய்களுக்கு இலவசமாக டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர் சுமார் 200 க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர். அவர்களுக்கு இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. முகாமில் ஈரோடு மாநகராட்சி கவுன்சிலர் ரவி பாஞ்சாலி சேவா மாநில தலைவர் சீனிவாச கதிர் மாவட்ட முன்னாள் வருவாய் அலுவலர் சண்முகம் ஆகியோர் இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை புஷ்பாஞ்சலி சேவா டிரஸ்ட் ஈரோடு மாவட்ட தலைவர் செந்தில் குமார் செய்திருந்தார். முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் ரவி சங்கர் அருண் குமார் ஸ்ரீதர் மற்றும் கணேசன் உதயகுமார் விமல் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நந்தா மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒருங்கிணைப்பாளர் நிர்மல் ராஜ் நன்றி கூறினார்.



## முதுகுளத்தூரில்

# த.வெ.க கட்சியினர் இனிப்பு மற்றும் பட்டாசு வெடித்து கொண்டாடினர்

முதுகுளத்தூர்,மே.10

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் த.வெ.க. கட்சி சார்பில் ஜோசப் விஜய் முதலமைச்சராக பதவியேற்றதை கொண்டாடும் விதமாக கட்சி நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இனிப்புகள்வழங்கிபட்டாசுகள் வெடித்து உற்சாகமாக கொண்டாடினர்.

இதில் யாசர் அராபத் , விஜித் ராஜ் ,குணா, சாகுல் அஜீம் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# அமமுக எம்எல்ஏ காமராஜை டிடிவி தினகரன் மிரட்டுகிறார்

## பெங்களூரு புகழேந்தி குற்றச்சாட்டு




கிருஷ்ணகிரி, மே. 11

மன்னார்குடி தொகுதி அமமுக எம்எல்ஏ காமராஜை, தினகரன் மிரட்டுகிறார் என புரட்சி அதிமுக பெங்களூரு புகழேந்தி தெரிவித்தார்.

இதுதொடர்பாக கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது : அமமுக எம்எல்ஏ காமராஜ், தவெகவுக்கு செல்ல முடிவு செய்துவிட்டார். இதுகுறித்து அவர் என்னிடம் தெரிவித்தார். தினகரனுடன் யாரும் பயணிக்க முடியாது. காமராஜை, தினகரன் மிரட்டுகிறார். தினகரனுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவியை பழனிசாமி கொடுப்பாரா என்பதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

அதிமுக ஆட்சியின் போது, தினகரனிடம் 18 எம்எல்ஏக்கள் சென்றனர். அப்போது திமுகவிடம் 99 எம்எல்ஏக்கள் இருந்தனர். அப்போது திமுக தலைவர் ஸ்டாலின் நினைத்திருந்தால் ஆட்சி அமைத்திருக்க முடியும். ஆனால், அவர், “கொல்லைப்புற வழியாக ஆட்சிக்கு வர மாட்டேன்” என்றார். திமுகவுக்கு எப்போது அரசியல் செய்ய வேண்டும் என தெரியும். தமிழகத்தில் பாஜக காலூன்றக் கூடாது என்பதால் தான் ஒரு இடத்தில் மட்டுமே பாஜக வெற்றி பெற்றுள்ளது. பாஜக கொடுக்கும் நெருக்கடியால் தான் விஜய்யால் வெளிப்படையாக பேச முடியவில்லை.

தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் ஆதரவு கேட்டால், காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், விசிக தங்களது ஆதரவைப் திரும்ப பெறுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மக்கள் நலன் காக்க விஜய்யின் அரசுக்கு பாமக முழு ஆதரவு அளிக்கும்: அன்புமணி




சென்னை, மே. 11

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்திருப்பது எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் நோக்கமும், எதிர்பார்ப்பும் ஒன்று தான். எந்தவகையான போதையும் இல்லாத, பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய, இளைஞர்களுக்கு தரமான கல்வியும், வேலைவாய்ப்பும் வழங்கக்கூடிய, உழவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடிய, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய, இவை அனைத்துக்கும் மேலாக சமூக நீதியை பாதுகாக்கக் கூடிய அரசு அமைய வேண்டும் என்பது தான் அது. இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசு தீவிரமாக முயல வேண்டும்.

தவெகவின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆணையில் புதிய முதல்வர் முதல் கையெழுத்திட வேண்டும்; மற்ற வாக்குறுதிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். மக்கள்நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாமக அதன் முழு ஆதரவை அளிக்கும்; அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும், அந்தத் தவறை திருத்தச் செய்வதிலும் பொறுப்புள்ள, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக பாமக செயல்படும்." என்று அன்புமணி கூறியுள்ளார்.

# முதல்அமைச்சர் விஜய்க்கு, பிரதமர் மோடி வாழ்த்து



சென்னை, மே. 11

முதல் அமைச்சர் விஜய்க்கு, பிரதமர்நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது: "தமிழ்நாடு முதல்அமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள். அவரது பதவிக்காலம் சிறப்பானதாக அமைய நல்வாழ்த்துகள். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு, தமிழ்நாடு அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும்" என்று தெரிவித்துள்ளார்.

# ஒத்திவாக்கம், உத்திரமேரூரில் நெல் மூட்டைகள் தேக்கம்



செங்கல்பட்டு / உத்திரமேரூர், மே. 11

ஒத்திவாக்கம், உத்திரமேரூரில் உள்ள கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேக்கம் அடைந்துள்ளன. இவற்றை கிடங்குகளுக்குஅனுப்பி வைக்க விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் ஒன்றியம், ஒத்திவாக்கத்தில் தேசிய கூட்டுறவு இணையம் வாயிலாக நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு கடந்த ஒரு வார காலமாக கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் கிடங்குக்கு கொண்டு செல்லப்படாமல் உள்ளன.

தற்போது மழை பெய்யும் சூழல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் மழையும் பெய்து வருகிறது. இதன் காரணமாக நெல் மூட்டைகள் நனைந்து வீணாகும் சூழல் ஏற்பட்டுள் ளது. உடனடியாக கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை கிடங்குக்கு கொண்டு செல்ல அலுவலர்கள் வாகனங்களை அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மழைக்காலங்களில் கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை மூடிவைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வழங்கப்படுவது போல் தார்ப்பாய் மற்றும் சணல் உள்ளிட்டவை தேசிய கூட்டுறவு நுகர்பொருள்இணையத்திலும் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

உத்திரமேரூர் பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல் விவசாயம் அதிகம் நடைபெறும் பகுதியாகும். கடந்த நவரைப் பருவத்தில் ஏரி மற்றும் கிணற்றுப் பாசனத்தைப் பயன்படுத்தி உத்திரமேரூர் அருகே உள்ள அரும்புலியூர், பழவேரி, கரும்பாக்கம், களியப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக நெல் சாகுபடி செய்யப்பட்டது.

கடந்த சில நாட்களாக கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணி மந்தமாக நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு லாரிகள் மூலம் உடனுக்குடன் ஏற்றிச் செல்லாததால். நிலையங்களிலேயே மூட்டைகள் மலை போல் குவிந்துள்ளன. அரும்புலியூர் உள்ளிட்ட பகுதிகளில் 8,000 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு தேக்கமடைந்துள்ளன. 10,000க்கும் மேற்பட்ட மூட்டைகள் இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் திறந்தவெளியில் காத்திருக்கின்றன.

## முதலமைச்சராக ஜோசப் விஜய் பொறுப்பேற்பு

# காவேரிப்பட்டிணம் மற்றும் மிட்டஹள்ளியில் காங்கிரஸ் மற்றும் தவெக கட்சியினர் இனிப்பு வழங்கி கொண்டாடினர்



கிருஷ்ணகிரி:மே:11

தமிழ்நாடு முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் பதவி ஏற்றுக் கொண்டார், தமிழகத்தில் 14 வது முதல்வராக ஜோசப் விஜய் பதவியேற்றதையடுத்து தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர், மற்றும தவெக கட்சியினர் உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டிணம் ஒன்றியம் மிட்டஹள்ளி அருகே உள்ள தாசம்பட்டி கூட்டு ரோட்டில் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் எல், சுப்பிரமணியன் தலைமையில் தவெக கட்சியினர்பட்டாசுவெடித்து உற்சாகமாகக் கொண்டாடினர். காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினரும், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவரும் மிட்ட ஹள்ளி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான எல், சுப்பிரமணியன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் நலத்திட்டஉதவிகள்மற்றும்இனிப்புகளைசுப்பிரமணியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ், தவெக கட்சியினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் - கடற்கரை மின்சார ரயில் சேவை பாதிப்பு: பயணிகள் ஒரு மணி நேரம் கடும் அவதி




நுங்கம்பாக்கம்அருகே உயர் அழுத்த மின்கம்பி அறுந்து விழுந்ததால், தாம்பரம் கடற்கரை தடத்தில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மின்சார ரயில் சேவை பாதிக்கப்பட்டது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று மதியம் பரவலாக மழை பெய்தது. இந்த நிலையில், நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகே மதியம் 1.40 மணி அளவில் மின்சார ரயில் இயக்கத்துக்கானஉயர்அழுத்த மின்கம்பி திடீரென அறுந்து விழுந்து, மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனால், தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கிச் சென்ற மின்சார ரயில்கள் நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், மாம்பலம், சைதாப்பேட்டை, கிண்டி, பரங்கிமலை, பழவந்தாங்கல் வரை ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. ரயில்கள் திடீரெனநிறுத்தப்பட்டதால் பயணிகள் குழப்பம் அடைந்தனர். ரயில் சேவை சீராவதற்கு சற்று நேரம் ஆகும் என்று ரயில் நிலையங்களில் அறிவிப்பு வெளியானது. இதனால், எழும்பூர், சென்ட்ரல், கோயம்பேடு உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று, ரயில்கள், பேருந்துகளைப் பிடிக்க இருந்தவர்கள் ரயில்களில் இருந்து இறங்கி, மழையில் நனைந்தபடியே தண்டவாளத்தில் நடந்து சென்றனர். இதற்கிடையே, பழுது குறித்து ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பேரில், ரயில்வே பணியாளர்கள் விரைந்து வந்து, உயர் அழுத்த மின் பாதையில் ஏற்பட்ட பழுதை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். மதியம் 3 மணி அளவில் மின்சார ரயில் சேவை சீரானது. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மின்சார ரயில் சேவை பாதிக்கப்பட்டதால், பயணிகள் மிகவும் அவதியடைந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மீண்டும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம்



தஞ்சாவூர் மே 11

தேர்தல் நடத்தை விதிமுறைகள் விளக்கிக் கொள்ளப்பட்டதால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மீண்டும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவித்ததாவது தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் முடிந்ததை தொடர்ந்து நடத்தை விதிமுறைகளும் விலக் கிக் கொள்ளப்பட்டன.

எனவே மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெறும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம், இதர சிறப்பு குறைதிர்க்கும் கூட்டங்கள் இனி மேல் தொடர்ந்து நடைபெறும் என்றார்

# தேர்தல் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு விருந்து அரசு வாகன டிரைவர்களுக்கு அழைப்பு இல்லாததால் விரக்தி

தஞ்சாவூர் மே 11

தஞ்சாவூர்மாவட்டத்தில்சட்டப் பேரவை தேர்தல் பணியில் ஈடுபட்ட அரசு அதிகாரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் விருந்து அளிக்கப்பட்டது. இதில் கலந்து கொள்ள அழைப்பு இல்லாததால் அரசு வாகன டிரைவர்கள் விரக்தி அடைந்தனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகளிலும் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் தேதி தேர்தல் விதிமுறைகள் அமல்படுத்தப் பட்டன. இதையடுத்து வாகனங் களுக்கு பணம் மற்றும் பரிசுகள் வழங்குவதை தடுக்கும் வகையில் பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு குழுக்கள் உள்ளிட்ட 72 குழுக்கள்அமைக்கப்பட்டன. இந்த குழு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வாகன சோதனை களில் தீவிரமாக ஈடுபட்டனர். மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி வாக்குப்பதிவும், கடந்த 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை அமைதியான முறையில் நடைபெற்றன

இதையடுத்து தேர்தல் பணியில் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அரசு அதிகாரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் தஞ்சாவூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மதியம் சைவ மற்றும் அசைவ விருந்து அளிக்கப்பட்டது இதில் 800 க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

ஆனால் தேர்தல் பணியில் அதிகாரிகளுக்கு வாகனங்களை இயக்கிய அரசு வாகன டிரைவர் களுக்கு அழைப்பு விடுக்கப்படாத தால் அவர்கள் விரக்தி அடைந்தனர்

இதுகுறித்து அரசு வாகன டிரைவர்கள் கூறுகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 தொகுதிகளிலும் 150 வாகனங்கள் டிரைவர்கள் வேலைப்பணியில் ஈடுபட்டோம் . அதிகாலை முதல் இரவு வரை அதிகாரிகளை பல் வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று பணியாற்றினோம். தேர்தல் பணியாளர்கள் முதல் பறக்கும் படை அதிகாரிகள் வரை அனைவருக்கும் நாங்கள் வாகனங் களை ஓட்டினோம். தேர்தல் பணி யில் ஈடுபட்ட அரசு அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்து, விருந்து அளிப்பது வரவேற்கத்தக்கது ஆனால் அந்த அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றிய எங்க ளை மரியாதைக்காக கூட அழைக்காதது வருத்தத்தை ஏற்படுத்தி யுள்ளது என்றனர்.

# திருச்சி வேட்பாளர்கள் செலவு கணக்குகளை ஒப்படைக்க அறிவுறுத்தல்



திருச்சி, மே. 11

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் நேற்று மாலை முதல் விலக்கப்பட்ட நிலையில், திருச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 7 நாட்களுக்குள் தங்களது தேர்தல் செலவு கணக்குகளை தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். தேர்தல் செலவின பார்வையாளர்கள் கணக்குகளை சரிபார்த்து சான்றிதழ் வழங்குவார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன் தெரிவித்துள்ளார். இது குறித்த விரிவான தகவல்கள் வெளியாகியுள்ளன.

### நாகர்கோவில் பூங்காவில்

# காதல் ஜோடி திடீர் மோதல் மாறி மாறி தாக்கினர்

நாகர்கோவில், மே. 11

நாகர்கோவில் மாநகராட்சி பூங்கா வேப்பமூடு சந்திப்பு பகுதியில் உள்ளது. தற்போது கோடை விடுமுறை என்பதால் தினமும் ஏராளமானவர்கள் இந்த பூங்காவில் வந்து செல்வது வழக்கம். இங்கு கோளரங்கம், சிறுவர்களுக்கானவிளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவில் இளம் ஜோடிகள் வருகை அதிகமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் நேற்று காலை சுமார் 25 வயது மதிக்கத்தக்க வாலிபரும், அவருடன் இளம் பெண் ஒருவரும் அங்கு வந்திருந்தனர். இருவரும் முறையாக டிக்கெட் பெற்று சிறிது நேரம் பூங்காவில் கை கோர்த்தபடி வலம் வந்தனர். இதை தொடர்ந்து அங்குள்ள ஒரு இருக்கையில் ஒன்றாக அருகருகே நெரு க்கமாக அமர்ந்திருந்து சிரித்து பேசிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் திடீரென இருவரும் திடீரென மாறி மாறி கடுமையாக திட்டிக் கொண்டனர். தொடர்ந்து இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டு, மாறி மாறி ஒருவரை ஒருவர் தாக்க தொடங்கினார். மேலும் இளம்பண்ணை வாலிபர் கடுமையாக திட்டினார். அந்த பெண் அழுதவாறு அந்த வாலி வரை திட்டினார்.

இதைபார்த்தபூங்காவில்இருந்ததுாய்மைபணியாளர்கள் ஓடி வந்து இருவரையும் சமாதான செய்தனர். பின்னர் இருவரும் எதுவும் பேசாமல் அங்கிருந்து தனித்தனியாக நடந்துசென்றனர். இந்தசம்பவத்தைபூங்காவில்சிறுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

### தருமபுரி மாவட்ட

# இந்திய ஐக்கிய கம்யூ. கட்சி சார்பில் முதலமைச்சர் விஜயிக்கு வாழ்த்து

தருமபுரி மே 11

தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள தவெகதலைவர் சி. ஜோஷப் விஜயிக்கு வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்களை தெரிவித்தனர். இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்ட நிர்வாகக்குழு கூட்டம் நல்லம்பள்ளி வட்டம் இலளிகம் தியாகி ஆர். பச்சாகவுண்டர் நினைவு படிப்பகத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ. பை. மாதையன் தலைமையில் நடைபெற்றது .

இதில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஜெ . பிரதாபன் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் குறித்தும், இதில் தருமபுரி மாவட்டத்தில் ஐந்து சட்டமன்ற தொகுதியில் நடந்த தேர்தல் குறித்தும், விரிவான முறையில் பேசினார்.

பின்னர் இதன் மீது நிர்வாகக்குழு உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஜி. மாதையன்,மாவட்ட பொருளாளர் ஈ. அலமேலு,மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி. இரவி,ஜி. பச்சாகவுண்டர்,ஜி. ராஜகோபால்,கே. லட்சுமணன்,எல். சி. கிருஷ்ணன்,வி. செல்வம்,ஜி. சம்பத் ஆகியோர் கலந்துக் கொண்டு பின்வரும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றினார்கள். தீர்மானங்கள்: 2026 ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு 17 வது சட்டமன்ற தேர்தல் முடிவடைந்து கடந்த 04052026 அன்று வாக்கு எண்ணிக்கை முடிந்த பின் வெளி வந்த முடிவுகள் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு இருந்தது. இது தமிழ்நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுவிடும் என்று மக்கள் அச்சமடைந்திருந்த நிலையில் 108 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்ற சி. ஜோஷப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகத்திற்கு ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில் தமிழ்நாட்டின் நலனை கருதியும், ஆளுநர் ஆட்சி வராமல் தடுக்கவும், மீண்டும் தமிழ்நாடு தேர்தலை சந்திக்காமல் இருக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் ),விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் தலா இரண்டு உறுப்பினர்களான முறையில் இருக்கும் எட்டு உறுப்பினர்களின் ஆதரவுடன் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற சி .ஜோஷப் விஜயிக்கு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட நிர்வாக குழு தெரிவித்துக் கொள்வதுடன் தமிழ்நாட்டு நலன்களை பாதுகாக்க ஆளுநர் ஆட்சியை தடுக்க தவெகவுக்கு ஆதரவு தெரிவித்த இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்ச் சிஸ்ட்), விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய ஐந்து கட்சிகளுக்கும் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட நிர்வாக குழு சார்பில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. தருமபுரி மாவட்டத்தில் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து மக்களிடம் அரசியல் பரப்புரை செய்யும் வகையில் அரசியல் கொள்கை விளக்க கூட்டங்களை இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதாக அக்கட்சியின் தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் தெரிவித்தார்.



### உலக வலசைப் பறவைகள் தினத்தை முன்னிட்டு

# நிமிர் குழு சார்பில் சிறப்பு விழிப்புணர்வு போஸ்டர்: எஸ் பி வெளியிட்டார்

நாகர்கோவில், மே.11

கன்னியாகுமரி மாவட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் நோக்கிலும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் நிமிர்குழுவுடன்இணைந்து சிறப்பு விழிப்புணர்வு போஸ்டர் வெளியிடப்பட்டது. இந்த போஸ்டர்கள் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஒட்டப்படவுள்ளதாகவும், மாணவர்கள் தங்களது பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிராக எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பாது காப்பை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாவட்ட காவல்துறையின் இந்த முயற்சி பொதுமக்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்தநிகழ்ச்சியில் குழந்தைகள்மற்றும்பெண்களுக்குஎதிரானகுற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்ரமணியன் மற்றும் அனைத்து உட்கோட்ட நிமிர் குழுவை சேர்ந்த பெண் போலீசார் கலந்து கொண்டனர்.



### போலீஸ் நிமிர் குழு முயற்சியால்

# 107 மாணவ மாணவியர்கள் +2 தேர்வில் சாதனைஎஸ்பி பாராட்டு

நாகர்கோவில், மே.11

குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கடந்த ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதி நிமிர் என்ற சிறப்பு சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வி மீட்பு முயற்சியை தொடங்கி வைத்தார்.

போக்சோ குற்றங்கள் இல்லாத பாதுகாப்பான கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இந்த குழு மூலம் பெற்றோர் இல்லாத குழந்தைகள், போதைப் பழக்கத்திற்குஆளானகுழந்தைகள், குடும்ப மற்றும் பொருளாதார சிக்கல்களால் பள்ளிப் படிப்பை நிறுத்திய மாணவர்கள்உள்ளிட்டபல்வேறு பாதிப்புக்குள்ளான குழந்தைகளை அடையாளம் கண்டு தொடர்ந்து கண்காணித்து வந்தது.

குறிப்பாக பல்வேறு காரணங்களால் பள்ளிக்குச் செல்லாமல் இருந்த 300 க்கும் மேற்பட்ட குழந்தைகள் மீண்டும் பள்ளிக்கல்வியில் இணைக்கப்பட்டு அவர்களின் கல்வி தொடர உறுதி செய்யப்பட்டது. அந்த வகையில், பள்ளிப்படிப்பைபாதியில்கைவிட்ட நிலையில் இருந்த மாணவ மாணவியர்களில் நிமிர் குழுவின் வழிகாட்டுதலால் மீண்டும் கல்வியை தொடர்ந்த 107 பேர், தற்போது நடைபெற்ற +2 பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். அந்த மாணவ மாணவியர்களை நேரில் சந்தித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

மேலும் அவர்களுக்கு பாராட்டு மற்றும் பரிசுகள் வழங்கி, உயர்கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் எதிர்கால முன்னேற்றத்திற்கு தேவையான முழுமையான வழிகாட்டலும் ஆதரவும் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

### கிருஷ்ணகிரியில் உள்ள முதியோர் இல்லத்தில்

# சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்கம் சார்பில் உலக அன்னையர் தின கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி மே 11

உலக அன்னையர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை, அன்னையின் அன்பு, தியாகம் மற்றும் கவனிப்பைப் போற்றும் வகையில் உலக அன்னையர் தினம் உலகெங்கிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 1908ல் அன்னா ஜார்விஸ் என்பவரால் அமெரிக்காவில் இது தொடங்கப்பட்டது. மக்கள் தங்கள் தாய்மார்களுக்கு மலர்கள், பரிசுகளை வழங்கி, சிறப்பு உணவுகளை சமைத்து, அவர்களுடன் நேரத்தை செலவிட்டு அன்பை வெளிப்படுத்துகின்றனர். "தாயிற் சிறந்த கோவிலும் இல்லை" என்ற பழமொழிக்கு ஏற்ப, குடும்பத்தில் தாய்மார்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நாளாக இது அமைகிறது.

உலக அன்னையர் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி நகர தமிழக வெற்றி கழகம் மற்றும் சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்கம் சார்பில் ராசு வீதியில் உள்ள முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர்களுக்கு கேக் வழங்கப்பட்டது. தமிழக முதல்வராக தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பொறுப்பேற்றுக் கொண்டதை முன்னிட்டும், உலக அன்னையர் தினத்தை முன்னிட்டும், நுகர்வோர் சங்க மாநில பொதுச்செயலாளர் டாக்டர் சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த அன்னையர் தின விழாவில் கிருஷ்ணகிரி நகர நிர்வாகி கணேசன், வார்டு உறுப்பினர்களான ஹரி, தேவா, ஜாவித், ஸ்ரீநாத், மற்றும் நுகர்வோர் சங்க நிர்வாகியான விஜயகுமார், ஹரி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### உலக வலசைப் பறவைகள் தினத்தை முன்னிட்டு

# புத்தளம் உப்பளத்தில் பறவைகளுக்கு வளையமிடுதல் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம்




கன்னியாகுமரி, மே 11

கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் உப்பளத்தில், நிபுணர்கள், வனத்துறை அதிகாரிகள் மற்றும் வனப் பாதுகாவலர்களைஒன்றிணைத்து, பறவைகளுக்கு வளையமிடுதல், பறவைகளை விடுவித்தல் மற்றும் பறவைகளைக் கண்காணித்தல் ஆகியவை குறித்த கள அடிப்படையிலான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அமர்வு நடத்தப்பட்டது.

இந்த கருத்தரங்கில், மாவட்ட வன அலுவலர் டாக்டர் அன்பு, பூதபாண்டி சரக அலுவலர் என். அன்பழகன், களியல் சரகத்தைச் சேர்ந்த முகமது மொஹிதீன் அப்துல் காதர், அழகியபாண்டியபுரம் சரகத்தைச் சேர்ந்த கலையரசன், மற்றும் வேலிமலை சரகத்தைச் சேர்ந்த கலை மணி உள்ளிட்ட வனத்துறை அதிகாரிகளும், நாற்பதுக்கும் மேற்பட்ட வனத் துறை ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

வலசைப் பறவைகள் கண்காணிப்பு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் எஸ். பாலச்சந்திரன், தனது குழுவினருடன் இணைந்து இந்த நிகழ்வை வழிநடத்தினார். விவேகானந்தா கல்லூரி பேராசிரியர் டாக்டர் ஆர் தர்மரஜினி மற்றும் பறவை ஆர்வலர் பொன்காசி ஆகியோரும் இந்த அமர்வில் பங்கேற்று பங்களித்தனர். பறவைகளுக்கு வளையமிடும் நுட்பங்கள், பாதுகாப்பான கையாளுதல் முறைகள் மற்றும் வலசைப் பறவைகளை விடுவித்தல் ஆகியவற்றின் செய்முறை விளக்கங்களில் இந்த நிகழ்ச்சி கவனம் செலுத்தியது.

மேலும், பறவைகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்காகக் கண்காணிப்பதன் முக்கியத்துவத்தையும் இதுஎடுத்துக்காட்டியது.

இந்த அமர்வின் போது, ரஷ்யாவின் ஆர்க்டிக் ப குதிகளிலிருந்து பயணித்த வலசைப் பறவைக ளை நெருக்கமாகக் கவனித்து, மென்மையாகக் கையாளும் ஒரு தனித்துவமான வாய்ப்பு பங்கேற்பாளர்களுக்குக் கிடைத்தது.

பங்கேற்பாளர்கள் பறவைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதோடு, உப்பங்கழிச் சூழல் மண்டலத்திற்கு வரும் வலசைப் பறவை இனங்களை அடையாளம் காண்பதில் நேரடி அனுபவத்தையும் பெற்றனர்.

வலசைப் பறவைகளுக்கு முக்கியமான தங்குமிடங்களாகவும், உணவு தேடும் இடங்களாகவும் விளங்கும் புத்தளம் போன்ற கடலோர வாழ்விடங்களின் சூழலியல் முக்கியத்துவத்தை இந்த அமர்வு வலியுறுத்தியது. இந்த எளிதில் பாதிப்படையக் கூடிய சூழல் மண்டலங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் சமூக விழிப்புணர்வின் அவசியத்தை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

### ராஜாக்கமங்கலம் அருகே

# 2ம் திருமணமான 6 மாதத்தில் வீட்டு குளியல் அறையில் இளம் பெண் தற்கொலை

நாகர்கோவில், மே. 11

ராஜாக்கமங்கலம் அருகே உள்ள மாதா காலனி பகுதியை சேர்ந்தவர் புஷ்பராஜ் மனைவி ஒபிலியா (38). இவருக்கு ஏற்கனவே பிரதாப் என்பவருடன் திருமணம் நடந்தது. குழந்தைகள் இல்லாததால் குடும்ப பிரச்சினை ஏற்பட்டு, கணவரை பிரிந்து நீதிமன்றம் மூலம் விவகாரத்து பெற்று ஒபிலியா தனது தாயாருடன் வசித்து வந்தார்.

பின்னர் கடந்த 25. 9. 2025 அன்று புஷ்பராஜை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். 2வது திருமணம் ஆகி சுமார் 6 மாதங்கள் ஆகியும் குழந்தை பேறு இல்லாத நிலையில் மன முடைந்த நிலையில் ஒபிலியா இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவ தினம் வீட்டில் இருந்த அனைவரும் வெளியே சென்று இருந்தனர். ஒபி லியா மட்டும் வீட்டில் தனியாக இருந்தார். அந்த சமயத்தில் தனக்கு குழந்தை பேறு இல்லாததை எண்ணி வருத்தமடைந்த அவர் வீட்டில் குளியல் அறைக்கு சென்று தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வீட்டில் உள்ளவர்கள் திரும்பி வந்து ஒபிலியாவை தேடிய போது அவரை காணவில்லை. பின்னர் வீட்டின் குளியல் அறையில் தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு ராஜகமங்கலம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# குமரி மாவட்ட பாரதிய ஜனதாவிலிருந்து 8 பேர் நீக்கம்: மேலும் பலரை நீக்க திட்டம்

நாகர்கோவில், மே.11

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. குமரி மாவட்டத்தில் 5 தொகுதலில் தாமரை சின்னம் களமிறங்கியது. ஆனால் ஐந்து தொகுதிகளிலும் 3 ம் இடத்திற்கு தள்ளப்பட்டது. இதற்கிடையே சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு கட்சியின் மாநில தலைமை மற்றும் நிர்வாகிகள் குறித்து குமரி மாவட்ட கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியினர் சிலர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் பொன்ராதாகிருஷ்ணன் தொடர்பாக சமூக வலைதளங்களில் பல்வேறு விமர்சனங்கள் வந்தன. இந்த நிலையில் கட்சியின் மாநில தலைமை குறித்தும் கட்சிக்காக பணியாற்றியவர்கள் மீதும் சமூக வலைத்தளங்களில் அவதூறுகளை பரப்பி கட்சிக்கு களங்கம் விளைவி த்ததாக, குமரி கிழக்கு,மேற்குமாவட்ட பகுதிகளை சேர்ந்த சார்ந்த 8 பேரை கட்சியிலிருந்து நீக்கி மாநில தலைவர்நைனார்நாகேந்திரன் உத்தரவிட்டார்.

அதன்படி குமரி மேற்கு மாவட்ட துணைத் தலைவர் பவானி எஸ் எம் எட்வின் ஜோஸ், கன்னியாகுமரி கிழக்கு இளைஞர் அணி மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ ஆர் அருண், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட பகுதியை சேர்ந்த பாரதிய ஜனதா உறுப்பினர் ஆர் ராஜகுமார், சிபின்குமார், பாலமுருகன், எஸ் சரண் குமார், டி. சுரேஷ் குமார் செல்வ அருண் ஆகியோர்கட்சி பொறுப்பிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மேற்கண்ட நபர்களிடம் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் நயினார் நாகேந்திரன் அறிவித்துள்ளார். இதற்கிடையே கட்சியின் சமூக வலைதள பதிவுகளை மாநில தலைமை கண்காணித்து வருகிறது. இதன் பேரில் மேலும் பல நிர்வாகிகள் நீக்கப்படலாம் என கூறப்படுகிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.